# சமுதாயம் மேன்மையுற சட்டம் இயற்றிய வள்ளுவர்

**திருமதி.ப.லிங்கம்**
தமிழ்த்துறை, கௌரவ விரிவுரையாளர், இரண்டாம் சுழற்சி,
எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்

---

## முன்னுரை

பாரில் உள்ள மக்கள் அனைவரும் பாகுபாடின்றி, ஏற்றுக்கொள்ளக்கூடிய அறக்கருத்துக்களை, செறிவுடனும், தெளிவுடனும் எடுத்துரைக்கும் அறநூல் திருக்குறள் ஆகும். முப்பாலில் முக்காலமும் பொருந்தக் கூடிய நீதிகளை, சட்டங்களை முத்து முத்தாக எடுத்துரைக்கும் நீதி நூல் திருக்குறள், எக்காலத்திலும் எந்நாட்டவராலும், எச்சமயத்தவராலும் பின்பற்றக்கூடிய நீதிகளை எடுத்தியம்பும் ஒரு சட்ட நூலாகத் திருக்குறள் திகழ்கிறது எனில் மிகையாகாது. இத்தகு சிறப்பு வாய்ந்த இந்நூலில் சமுதாயம் மேன்மையுற வள்ளுவர் இயற்றிய சட்டங்கள் குறித்து ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## சமுதாயமும், சட்டமும்

உறவு முறையில் சில தனிமனிதர்கள் சேர்ந்த கூட்டமைப்பு குடும்பம். பல குடும்பங்கள் சேர்ந்து குழுவாக இருப்பது சமுதாயம். சமூகம் ஒரு குடும்பம் போன்றது என்பது காந்தியடிகளின் கருத்து. அவ்வகையில் சமுதாயம் என்பது ஒவ்வொருவரின் நன்மைக்காகக் கூடி வாழும் மனிதர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும். சமுதாயத்தில் தனிமனிதக் கடமைகளைப் புரிந்து கொண்டு கடமையாற்றுவது அவசியம். தன்னை வாழ்விக்கும் சமுதாயத்திற்கு பொறுப்புணர்ந்து செயலாற்ற வேண்டும்.

அங்ஙனம் சமுதாயக் கடமையாற்றும் ஒவ்வொரு தனி மனிதனையும், சமூகத்தையும், அரசினையும் ஒழுங்குபடுத்தும் விதிகள், நெறிமுறைகள் சட்டம் எனப்படும். **“இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் மக்களின் உரிமைகள் அரசாங்கத்தால் பாதுகாக்கப்பட வேண்டும்”** என்ற விதிமுறையைக் காண்கின்றோம். **“கடமைகளை”** உணர்த்திக் கட்டுப்பாடுகளை விதித்து மக்களின் வாழ்வை நெறிமுறைப் படுத்துவதற்குப் பிறந்ததுதான் **“சட்டம்”.** அந்தச் சட்டத்தின் கூறுபாடுகளைக் குறளில் காண்கின்றோம்.

## தனிமனிதனுக்குரிய சட்டங்கள்

ஒவ்வொரு தனிமனுதனுக்கும் உரிய வாழ்க்கை விதிமுறைகளை வள்ளுவர் தம் குறள்களில் நுட்பமாகப் பதிவிட்டுள்ளார். சான்றோர் பழிக்கக் கூடிய எந்த ஒரு செயலையும்

எந்த சூழ்நிலையிலும் அதாவது தன்னை ஈன்றதாய் உயிர்போகும் அளவிற்கு பசியில் இருந்தாலும் செய்யக்கூடாது என்பதனை,

**“ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை”** **(குறள்:656)**

என்ற குறளில் சுட்டுகின்றார். இந்த ஒரு குறளிலேயே தனிமனிதனுக்குரிய அனைத்து விதிமுறைகளும் அடங்கிவிடுகின்றது. அது மட்டுமின்றி ஒவ்வொரு தனிமனிதனின் கடமையையும் உரிமையையும் வாழ்க்கை நெறியின் சட்டமாகப் பின்வரும் குறளில் கூறுகின்றார்.

**“முயற்சி திருவினை ஆக்கும் முயற்சியின்மை**
**இன்மை புகுத்து விடும்”** **(குறள் : 616)**

ஒவ்வொரு தனிமனிதனும் தானும் சமுதாயமும் முன்னேற வேண்டும் என்றால் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் இல்லாமை புகுந்து விடும் என்பதை இதைவிடத் தெளிவாக யாரால் கூறமுடியும்.

## இல்வாழ்க்கை நெறிகள்

ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கை நடத்துவதே முதலில் தோன்றிய சமுதாய நீதி என்று “திருக்குறளில் அறவியல் என்ற நூலில் வீ.செ.ப. கந்தசாமி கூறியுள்ளார். அதுவே வளர்கின்ற பிற சமூக நீதிகளுக்கு அடிப்படையானது என்பதைக் குறிக்கவே திருவள்ளுவர்,

**‘அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை ’** **(குறள் :49)**

என்றார். மேலும் சமுதாயம் இன்பத்தை நோக்கியே செல்கின்றது என்பதும், அதுவே அதன் குறிக்கோள் என்பதனையும் வள்ளுவர்,

**“அறத்தான் வருதே இன்பம்”** **(குறள் :39)**

என்றும்,

**“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது”** **(குறள்:45)**

என்றும் உறுதிபடக் கூறுவதிலிருந்து அறியலாம். ஒழுக்கத்துடனும், அறநெறிபிறழாமலும் வாழும் இல்வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை என்பதனை

**“ஆற்றின் ஒழுக்கு அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து ”** **(குறள்:48)**

என்கிறார் வள்ளுவர், அதுமட்டுமின்றி கள்ளுண்ணுதல், பிறன்மனை நயத்தல், பொய், களவு, காமம் போன்ற தீய குணங்களும் இல்வாழ்க்கைக்கு ஒவ்வாதன என்கிறார் வள்ளுவர். இல்லறமகளிர்க்குரிய நெறி என்ன என்பதை

**"தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"** **(குறள் :56)**

என்ற ஒரே குறளில் தெளிவாக இயம்புகின்றார்.

இல்லறத்தில் கணவன் மனைவி மட்டுமின்றி குழந்தைகளும் நற்பண்பு மிக்கவர்களாக பெற்றோர்க்குப் பெருமை சேர்ப்பவர்களாக இருக்க வேண்டும் என்பதைப் **"புதல்வரைப் பெறுதல்"** என்ற அதிகாரத்தில்.

**"மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன்தந்தை**
**என்னோற்றான் கொல்எனும் சொல்"** **(குறள்:70)**

என்ற குறளில் எடுத்துக் கூறுகின்றார். இங்ஙனம் ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களும் நற்பண்புடையவர்களாக இருக்கும் பொழுது சமுதாயம் இயல்பாகவே மேன்மை அடையும் என்பதில் ஐயமில்லை.

## சமுதாய நெறிகள்

சமுதாயத்தில் உள்ளோர் அனைவரும் அனைத்து நலன்களையும் நிறைவாகப் பெற்று வாழ்ந்தால் மட்டுமே நாமும் சுதந்திரமாக, அமைதியாக, நிறைவாக வாழமுடியும் என்பதற்குப் பல நெறிகளை வள்ளுவர் வகுத்துள்ளார். சாதி மத பேதமற்ற சமத்துவ சமுதாயமாக ஒரு சமுதாயம் இருக்க வேண்டுமானால் அங்கு மேலோர் கீழோர் என்ற பாகுபாடு இருக்கக் கூடாது. இதனைக் கருத்தில் கொண்ட வள்ளுவர் அனைத்து சமூகத்தினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் பிறப்பினால் அனைவரும் ஒன்றே செய்யும் தொழிலில் மட்டுமே வேற்றுமை என்ற நெறியினை

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான் "** **(குறள்:792)**

என்ற குறளில் வலியுறுத்துகின்றார். மேலும் வறுமை, பசி, பகை, பிணி ஆகியவை இல்லாத சமுதாயமே சிறந்த சமுதாயம் என்பதனை,

**"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேராது இயல்வது நாடு"** **(குறள்:734)**

என்ற குறளில் தெளிவுபடுத்துகின்றார்.

**“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**
**அறிவி லோங்கி இவ்வையம் தழைக்குமாம்”**

என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க கல்வியில், குடியாண்மையில், இல்லாண்மையில் ஆண், பெண் இருவருக்கும் சமமான விதிகளைப் பலஇடங்களில் வகுத்துக் கூறியுள்ளார்.

## அரசியல் நெறிகள்

நாட்டின் தன்மை, ஆட்சியின் இயல்பு, மக்களின் நிலை, அரசன் நிலை ஆகியவற்றின் தன்மையை எடுத்துக் கூறுவது அரசியல் எனலாம்.

அரசியல் என்ற களத்தின் நாயகனாய் வீற்றிருப்பவன் அரசன், நாடாளும் அரசன் உயர்ந்த குறிக்கோள் உடையவனாகவும், நற்பண்புடையவனாகவும், கற்றறிந்தவனாகவும், ஆற்றல் நிறைந்தவனாகவும் இருக்க வேண்டும் என்பதே வள்ளுவரின் கருத்து.

பொருட்பால் முழுவதுமே அரசியல் சார் நெறிகளைக் கூறியுள்ளார். காவற்பணி, போர்ப்பணி, ஆட்சிப்பணி ஆகிய அனைத்திற்கும் உரிய சட்டங்களை எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார்.

நல்லாட்சி, நடத்தும் அரசன் இறைவனுக்கு ஒப்பானவன் என்பதை

**“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறைஎன்று வைக்கப் படும்” (குறள்:388)**

என்ற குறளில் பாங்குற எடுத்துரைக்கின்றார்.

ஒரு அரசனுக்குரிய தகுதியை இதைவிடச் சிறப்பாக யாராலும் கூற முடியாது.

வரவு செலவுக் கணக்குகளிலும் ஒரு அரசன் எவ்வாறு திறம்படச்செயல்பட வேண்டும் என்பதை

**“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு” (குறள்.385)**

என்ற குறளில் செவ்வனே செப்புகின்றார். மேலும் வரி வசூலித்தலிலும் குடி மக்களைத் துன்புறுத்தக் கூடாது, உடையார் இன்மையின் தானே வந்துற்ற பொருளும், சுங்கமாகக் கொள்ளும் பொருளும், பகைவரை வென்று திறையாகக் கொள்ளும் பொருளும் மட்டுமே வேந்தன் பொருள். மற்றபடி குடிகளை வருத்தக் கூடாது என்பதனை.

**“உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்**
**தெறுபொருளும் வேந்தன் பொருள்” (குறள்:756)**

என்ற குறளில் நாசூக்காக நவில்கின்றார்.

இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பாய் அரசனுக்குரிய நெறிகளை

**“படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு” (குறள்:381)**

என்று ஒரே குறளில் தெளிவாகச் சுட்டுகின்றார்.

ஓர் அரசு என்பது நிருவாகம், சட்டம், நீதி ஆகியவற்றைத் திறம்படக் கையாண்டு, குடிமக்களிடையே குற்றம் கண்டவிடத்து அதனைக் கண்டித்துக் களைதல் வேண்டும் என்பதை,

**“குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்**
**வடுவன்று வேந்தன் தொழில்” (குறள்:549)**

என்கிறார்.

மேலும் மக்கள் விருப்பத்திற்கு எதிராக மன்னன் ஆட்சி நடத்துவானேயானால் அவனுடைய ஆட்சி விரைவில் கெடும் என்பதனை 564 மற்றும் 555 வது குறள்களில் அறிவுறுத்தி உள்ளார்.

இவையனைத்திற்கும் முத்தாய்ப்பாக கல்வியின் பெருமையைப் பாங்குற எடுத்துரைக்கும் வள்ளுவர், அரசனாக இருந்தாலும், சரி, குடிமக்களாக இருந்தாலும் சரி, அறம்சார் அனுபவக் கல்வியினையும், ஏட்டுக்கல்வியினையும், படிப்பதோடு நின்று விடாமல் அதனைப் பின்பற்றி நடத்தல் வேண்டும். அதுவே சமுதாயத்திற்கும், குடும்பத்திற்கும் நன்மை பயக்கும் என்பதனை,

**“கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக” (குறள்:391)**

என்ற குறளில் அருமையாக அறிவுறுத்துகின்றார்.

## நிறைவாக

தனிமனிதனது வாழ்வின் மேன்மையை அறத்துப்பாலிலும் சமுதாய வாழ்வின் மேன்மையை பொருட்பாலிலும், இல்லறவாழ்வின் இன்பத்தை இன்பத்துப்பாலிலும் எடுத்துரைக்கும் வள்ளுவரின் வாய்மொழிக்கு நிகர் வேறில்லை எனலாம்.

தனிமனித வாழ்விற்கும், சமுதாய வாழ்விற்கும் ஏற்றதொரு நெறியைப் போற்றி உரைத்திடும் நூல் திருக்குறள். முக்காலமும் எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய ஒரு சட்ட நூலாக, நீதி நூலாகக் குறள் திகழ்கின்றது. நாடும் வீடும் நலம்பெற அய்யன்

வள்ளுவர் வகுத்த சட்டங்களைப் பின்பற்றி நடந்தால் ஏற்றமிகு சமுதாயம் மலரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**பார்வை நூல்கள்**


1. திருக்குறள் - பரிமேலழகர் உரை, கழக வெளியீடு
2. இலக்கியச் சிந்தனைகள் - முனைவர் திருமதி.ச.சிதம்பரம்
3. பதினெண்கீழ்க்கணக்கு ஆய்வுக்கோவை (ஆண்டு 2013) - குறிஞ்சி பதிப்பகம்
4. ஆய்வுச் சிந்தனைகள் (ஆண்டு 2016) - ஐந்தமிழ் ஆய்வு மன்றம்
5. புதியநோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு - தமிழண்ணல்
6. வளர்தமிழ் ஆய்வு, கட்டுரைத் தொகுப்பு, (ஆண்டு 2019) - வளர்தமிழ் ஆய்வு மன்றம்
7. இணையதளத் தகவல்கள்